RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1823

# எம்.ஏ. சுசீலாவின் சிறுகதைகளில் பெண்ணிய உளவியல் பார்வையில் பாலியல் அரசியல் காட்டப்படும் விதம்

**மா. ஜாஸ்மின் பிரியா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஏ.ஜே.கே. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641105, தமிழ்நாடு, இந்தியா.

# Sexual Politics in the Short Stories of M.A Susheela from Feminist View

**M. Jasmine Priya** [a, *]

[a] Department of Tamil, AJK College of Arts and Science, Coimbatore-641105, Tamil Nadu, India

* Corresponding Author: jasminepriya@ajkcas.com

Received: 12-09-2022
Revised: 03-10-2022
Accepted: 14-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

This article is about the troublesome women and how they are enslaved everywhere and in every way. The women are subjected to many kinds of problems, emotional distress and sufferings. It is necessary to examine psychologically what is the reason behind these sufferings. Feminist psychology is the field that examines the everyday practices that are followed in a women's day-to-day life, their family, education, work and their emotional strength. The struggle for women's rights and the recognition of women's individuality in India is equal to freedom struggle. Women must be given equal freedom to men, their feelings should be respected, their education shouldn't be hindered, property rights should be given and their emotions should be understood. Today feminist psychology integrates research on human development, sports, health, industry, media, law, social sciences, art, literature and humanities.

**Keywords:** Short Stories, Sexual Politics, Feminist View, Family, Education, Work Emotional Strength

## முன்னுரை

பெண்ணிய உளவியல், பெண்ணிய உளவியல் வரலாறு, பெண்ணியத் திறனாய்வியல், பெண்ணிய உளவியலும், பெண்ணியமும், பெண்ணியம் - பாலினப் பாகுபாடு, தாராளவாதப் பெண்ணியம், சோசலிசவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், பெண்ணிய கருத்தாக்கங்கள், பண்பாட்டுக் கட்டமைப்பு, தாய்வழிச் சமூகம், தந்தைவழிச் சமூகம், பாலியல் பணி வேறுபாடு, பாலினம், பாலியல் அரசியல் அதிகாரம், இந்தியப் பெண்ணியம், பெண்ணிய நோக்கில் இலக்கியப் படைப்பும் வாசிப்பும், பெண்ணிய கருத்தாக்கங்கள், பண்பாட்டுக் கட்டமைப்பு, விடுதலை,பெண்ணியத் திறனாய்வு, தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகள், பெண்ணியம் சில எளிய புரிதல்கள், பெண்ணியக்கத்தில் வேனிலா ஸ்டாலின், பெண்ணியக்கக் கோட்பாடுகள், பெண்ணியக்கப் பணி உரிமைப் போராட்டம், பெண்மை போற்றல், பெண்ணியச் சிந்தனைகள், பெண்ணடிமை நிலைக்கான காரணங்கள் ஆகியன இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

பெண்ணின் உணர்வுக் காட்சி, கற்றல், பிரச்சனைத் தீர்த்தல், காரணம் அறிதல், எண்ணுதல், நினைவகம், கவனம், மொழி மற்றும் மனஎழுச்சி ஆகிய அனைத்தும் இன்று ஆராயப்பெறுகின்றன. மனதில் செயல்முறையால் அதன் நடைமுறையால் பெறும் செய்திகளும் அறிவாற்றல் உளவியலாக ஆராயப்பெறுகின்றன. நோயம் சோம்ஸ்கி என்னும் உளவியலாளர் “அறிவாற்றல்புரட்சி” ஒன்றை

அறிமுகப்படுத்தினார். நடத்தையியலாளர்கள் தூண்டுதல், எதிர் செயல், வலிமையூட்டுதல், மனித நடத்தைக்குரியதை பெண்ணிய நிலையிலும் ஆராய்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

இயல்பான நடத்தை, நெறிபிறழ்நடத்தை, செயல்புரிய இயலாமை, தனிப்பட்ட மனஇறுக்கம், சமூக நெறிமுறைகளை மீறிய நிலை அல்லது செயல்முறை மீறல் பற்றிய ஆய்வுகளும் பெண்ணியம் சார்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

ஒப்பிட்டுப் பார்த்தல், வாழ்க்கைத் தொழில் சார்ந்த உடல்நலம், ஆளுமை, இணங்க வைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் உளவியல் அணுகுமுறையோடு சமூகத்தில் உள்ள குறைகளை ஆராய்ந்து அறிந்து பெண்களின் செயல்பாட்டை அறிவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் பெண்ணிய ஆய்வுகளில் ஈடுபடும்போது அது பெண்களின் பல்வேறு திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டுகின்றது.எனவேபெண்ணிய ஆய்வுகளில் உளவியல் அணுகுமுறையோடு ஒப்பிட்டு ஆய்வு செய்வது மிக உயரிய நன்னடத்தைகள், ஆளுமைகள், முடிவெடுத்தல், செயல்நிலைப்படுத்தல் ஆகியவை பெண்களிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும்.

பெண்ணிய உளவியலும், பெண்ணியமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை என்பதால் சிறுகதைகளில் அமைந்துள்ள கதைக்கரு, கதாப்பாத்திரங்கள், கதாப்பாத்திரங்களின் பண்புகள் ஆகியவை ஆராயப்பெற்று பெண்ணின் ஒவ்வொரு நிலையும் கண்டறியும்போது அதனைப் படிப்பவர்கள் தங்களை ஆளுமைப்பண்புள்ளவர்களாக உருவாக்கமுடியும் என்னும் அடிப்படையில் இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளன.

## பெண்ணியமும் விளக்கமும்

பெண் இல்லையென்றால் மானிட வாழ்வு உயிரற்றதாகக் கருதப்படும். பெண் இல்லாத மனித வாழ்க்கை 'மாலுமி இல்லாத மரக்கலம்| போன்றது. சமுதாயத்தின் சரிபாதி அங்கமாக பெண்கள் காலங்காலமாகச் சமுதாயத் தாக்குதலுக்கு ஆட்பட்டு உரிமை இழந்து வந்திருக்கிறார்கள். அதனால்தான் பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் அனைவரும் பெண் விடுதலையைப் பற்றிச் சிந்தித்தனர். ஆணுக்கு இணையாக அனைத்து நிலைகளிலும் பெண் இருக்க வேண்டும் என்ற தேவையை இவர்கள் தம் கவிதை வாயிலாக எடுத்துக் கூறி வந்துள்ளனர். பெண்களைப் பற்றி, பெர்னாட்ஷா கூறியதாகப் பாரதிதாசன்,

"கல்வியில் உரிமையில்லை பெண்களுக்குக்

கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்!

புல்லென்றே நினைக்கின்றீர் மனைவிமாரைப்

புருஷர்களின் உபயோகம் பெரிதென் கின்றீர்!

வல்லவன்பேர நிஞன் வார்த்தைக் கேட்டீர்

மனோபாவம் இனியேனும் திருந்தவேண்டும்" என்று கூறுவதால் பெண் இனத்தின் நிலையைப் பற்றி அவர் கொண்ட கவலையை உணரமுடிகின்றது (Subramaniyan, 1982).

"பெண்ணியம் பற்றியும் பெண்களுடைய தகுதிநிலை குறித்தும்ஆராய்வதற்கு பெண்ணியத்தைப் பற்றி எழுதிய படைப்பாளர்களின் இலக்கியங்கள் பெரிதும் உதவியாக இருக்கிறது. தமிழ் இலக்கியத்தில், பெண்ணியத் திறனாய்வு பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை முன்வைப்பதன் மூலம் பெண்ணியத்தின் புரிதலும், தேவையும் அறிந்துக் கொள்ள இயலும். சமூகத்தில் பெண்கள் வசிக்கும் பண்பாட்டு தளங்களில் பெண்களின் வாழ்வை அறிந்துக் கொள்ளவும், அவர்கள் மீதான எதிர்மறையையும், எதிர்மறையான எண்ணங்களைப் அறிந்துக் கொள்ளவும்பெண்ணியம் உதவுவதால் இதுபற்றி விரிவாக அறிவதும், உளவியல் அடிப்படையில் பயிற்சி பெறவும் ஆய்வு அவசியமாகிறது.

## பெண்ணியம் - வகைகள் வேறுபாடுகள்

ஆண் பெண் என்ற பாலினப் பாகுபாடுகொண்டசமூகத்தில் உள்ள பிரிவினை வேர்களை தெரிந்துக் கொள்ளவும், பெண்களுக்கு மட்டுமுள்ள அடக்குமுறையையும், பெண்களின் உரிமைகளை பறித்துக் கொள்ளும்முறைகளையும் உணர்ந்துக் கொள்ளக் கூடிய வகையிலும் பெண்ணியம் சிறந்ததொரு தெளிவுரையை முன்வைக்கிறது. அது மட்டுமில்லாமல் பெண்களை எதிர்த்து வரும் சமூகத்திலும், அரசியலிலும், ஆணின் அதிகார வர்க்கத்தை அடியோடு அழிக்க எதிர்த்துச் செயல்படக்கூடிய மன நிலையை அனைவரும் அறிந்துக் கொள்ளக் கூடிய வகையிலும் பெண்ணியம் காணப்படுகிறது. இதற்கு, "சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வுநிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்" என்னும் பகுதி சான்றாக அமைகிறது (Mallika, 2006). வளர்த்தெடுத்த பெண்ணியத்தையும், பெண்களுக்கான உரிமையையும், பெண்களுக்காகவும் பெண்ணியத்திற்காகவும் தம் படைப்புகள் மூலமாகவும் பிற முறைகளிலும் மனதார சிந்திக்கக்கூடிய சிந்தனையாளர்களையும், பெண்ணியலாளர்களையும் அவர்களால் உருவாக்கப்பட்ட சங்கங்களையும் நன்கு அறிந்துகொண்டு செயல்படுவது தேவையாகிறது. மேற்கத்திய நாடுகளில் தொழில் வளர்ச்சி மேலோங்கி காணப்பட்டதாலும் அதனோடு பெண்களின் வளர்ச்சியும் கணக்கிடப்பட்டதால் பெண்ணியம் பிறந்தது என்பர். எனவே இவ்வகையான பெண்ணியத்தை மூன்று வகைகளுடன் அழைப்பர்.

அவை பின்வருமாறு:

1. தாராளவாதப்பெண்ணியம்
2. சோசலிசவாதப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்

### தாராளவாதப் பெண்ணியம்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது தான் தாராளவாதப் பெண்ணியம். தாராளவாதப் பெண்ணியத்தின் கோட்பாட்டை மேரிவுல்ஸ்டன் கிராஃப்ட் எழுதிய எ விண்டிகேசன் ஆஃப் தி ரைட்ஸ் ஆஃப் வுமன் என்ற நூலில் பார்க்க முடியும். ஆணிற்கு இணையாக பெண்களுக்கும் அனைத்து வகையான உரிமைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்று மேரிவுல்ஸ்டன் கூறியுள்ளார்.

ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் "ஸப்ஜெக்சன் ஆஃப் வுமன் என்ற நூலில் "பெண்கள் தங்களின் வாழ்வைத் தாங்களே தீர்மானிக்க வேண்டும் என்றும், சட்டத்தில் ஆணுக்குப் பெண் சமம்" என்றும் அனைவருக்கும் விழிப்புணர்வை கூறிப் பெண்களுக்காக அனைத்து தளங்களிலும் போராடியவர் ஆவார். மில் என்ற அறிஞர் "பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக்கொள்ளத் தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும் ஓட்டுரிமை பெறும் தகுதியை உடையவராவதும் மிக முக்கியமென எடுத்துரைத்தார்" நிறைய அறிஞர்கள் பெண்ணியத்திற்கான மாற்றுக் கருத்தை முன் வைக்கின்றனர் இதில், பெண்ணியத்தின் தாய் எனப் போற்றப்படும் பெட்டிஃபிரைடன் ஆண்களுடைய ஆதிக்கத்தை கற்றுக்கொடுத்த பெண்கள் அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் பணிப்பகிர்வை நீக்கி, தனி ஓர் உயிராக வாழ வேண்டும் என்றும், முதலில் குடும்பம் பெண்ணை அடிமைப்படுத்துகிறது எனக் கூறிவந்த கருத்தை மாற்றிக்கொண்டு, பின்னர் குடும்பத்தைப் பெண் விலக்கிவிடக் கூடாது எனவும் கருத்துத் தெரிவித்துள்ளார் (Vethaththa, 2006). இவர்கள் "மிதவாதப் பெண்ணியலாளர்கள்" எனக்கருதப்படுகின்றனர். இந்த நிலையைத் தேவதத்தா, "மிதவாதப் பெண்ணியலார், குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு சமூகப் பழக்க, வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டு வர விரும்பினர். இவர்கள் சமூக நிறுவனங்கள், சட்டம், மனப்போக்கு, சமூக அமைப்பு ஆகியவற்றை, குறிப்பாகக் குடும்ப அமைப்புப் பற்றி ஏதும் சிந்திக்கவில்லை. சட்டங்களின் தொகுதி, சமூகத்தை மாற்றிவிடும் என நம்பினர். அதனால் அடிப்படையான மாற்றம் தேவை என்று உணரவில்லை" (Mallika, 2006). எனவே,

பெண்ணியம் குடும்பத்திலும், சமூக வாழ்விலும் பெண்களை சீர்திருத்தும் பணியை மேற்கொண்டது. பருவங்கள் மாறும்! என்னும் கதையில் குடும்பம், குழந்தை என்று வட்டம் விரிவடைந்து அனுபவங்கள் முதிரும் போது தன்னுடைய நட்பு ஒரு பக்குவம் பெற்றதுபோல தன் மகளுக்கும் நேரும் என்று நினைக்கும் அம்மா. தோழியின் பிரிவுக்காக கண்களில் தாரை தாரையாய் அழும் பெண்களுக்கு தோழியே வெளி உலகம். வடிகால் வளர்ச்சிக்கு உரம். அதுவும் ஏதோ காரணங்களினால் நழுவிப் போகுமானால் தாங்க முடிவதில்லை. தோழியைத் தினம் தினம் பார்த்தே வந்த பின்பும் பேச என்னதான் இருக்குமோ? இவர்களுக்குள்ளே என்று பிறர் நகைச்சுவையாக்கினாலும் பேசியே தீரவேண்டும். அப்படி ஒரு பெண் தன்னுடைய தோழி மாற்றலாகி போகின்ற துயரத்தோடு வருகையில் அம்மாவுக்கு அவள் துயரம் புரிகிறது. தோழியை அவளோடு உயிராய் பழகிய காலங்களை நினைத்துக் கொள்கிறாள். இதில் மிதவாதப்பெண்ணியமும், பெண்ணிய உளவியல் பார்வையும் பார்க்கமுடிகின்றது.

ஆண்கள் உலகம் வேறு. வெளியே அவனுக்கு ஆயிரம் காரியங்கள். அவசரங்கள். நட்பில் கரைய நேரமில்லாத நிலை, பெண் அவ்வாறு இல்லை. பெண்ணுக்குத்தான் தெரியும் பிரிவுகளின் வேதனை. இதனை பெண்ணிய மனதாய் நுணுக்கமாக வெளிப்படுத்தியுள்ளார் (Susila, 2011).

## சோசலிசவாதப் பெண்ணியம்

சோசலிசவாதப் பெண்ணியம் மார்க்சியலாளர்களின் கோட்பாட்டின்படி வளர்ந்தது எனலாம். குடும்ப நிலை, சொத்தில் தனிமை, வாரிசை உருவாக்கல் போன்றவற்றால், பெண்களை ஒடுக்கக்கூடிய தந்தை போன்ற மேலாதிக்கச் சமூகத்தை எதிர்த்து எழுந்தது சோசலிசவாதப் பெண்ணியம்.

மேலாதிக்க முதலாளித்துவத்தின் ஒடுக்குமுறைகளை தாராளவாதப் பெண்ணியத்தால் முழுவதுமாக வெளிப்படுத்தவோ எடுத்துக்கூறவோ முடியவில்லை. ஆனால், தனி உயிராகப் பெண்வாழ அடிப்படை உரிமைகளைப் பேசினது தாராளவாதப் பெண்ணியம்.

"உழைக்கின்ற பாட்டாளி வகுப்பு மக்களின் விடுதலையோடு ஒட்டுமொத்த மாந்தர் இன விடுதலையை எட்டுவதற்காக சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து கார்ல்மார்க்ஸ் ஃபிரெடரிக் ஏங்கல்ஸ் ஆகியோர் முன்வைத்த சித்தாந்தத்தை அடியொற்றி நிகழ்ந்த சோசலிசப் புரட்சிகளோடு தோற்றம் கொண்டதுதான் சோசலிசப் பெண்ணியமாகும். வரலாற்றுக்கு முந்திய புராதனமாக சமூகங்களில் பெண்ணுக்குச் செயலூக்கமான பங்கிருந்தது. இது பின்னர் வேளாண்மைச் சமூக மாற்றத்தால் புதிதாக உருவான குடும்பம், நிலவுடைமை, அரசு ஆகியவற்றால், ஆணின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நிலைமையே பெண்ணுக்கான முழு வாழ்வாய் அமையலாயிற்று" என்று ஏங்கல்சு கூறிய கருத்து சோசலிசப் பெண்ணியத்திற்குரிய தொடக்கமாக அமைந்தது (Parimalam, 2011).

சமுதாயத்தில் தொடக்கக் காலங்களில் பெண்களை வேட்டையாடுதல் தொடங்கி, குடும்பத்தை உருவாக்குகின்ற பணிகள்வரை அனைத்தும் பெண்ணின் தலைமையில் இருந்தன. அதற்குப் பின்பு தந்தைவழிச் சமூகத்தில் உள்ள தனிச் சொத்துரிமை, வாரிசு உருவாக்கல் போன்றவை உருவானதால் பெண்ணின் நிலை தாழ்ந்து விட்டது. இந்த நிலை உருவாக முதலாளித்துவச் சமூக அமைப்பு ஒரு காரணியாகத் திகழ்கிறது. இதனைக் கீழ்க்காணும் தேவதத்தாவின் கருத்திலிருந்து அறியலாம்.

"பெண் எல்லா இடங்களிலும் அனைத்துச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்டாள்.நவீன முதலாளித்துவத்தில் மேலும் ஒடுக்கப்பட்டாள்.பெண்கள், குறைந்த கூலிபெறும் தொழிலாளர்களாய் நியமனம் செய்யப்பட்டு, சுரண்டப்பட்டார்கள்.பலர், வீட்டு வேலை செய்பவர்களாய் மாறினர்.பணம், மதிப்பீடுகளை முடிவு செய்கிறபோது பெண் வெளியே சென்று வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது.நாள் முழுதும் செய்யப்படுகிற வீட்டு வேலைகளுக்குச் சம்பளமில்லாததால், அவள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது.முதலாளித்துவச் சமுதாயம் தேவை நேர்ந்தபோதேல்லாம் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டது. இனவேறுபாடு போன்றே பாலினவேறுபாடும் முதலாளித்துவச் சமூகத்திற்கு முக்கியமாய் அமைந்து, பெண்கள் குறைந்த கூலிக்கு வரும் உழைப்பாளிகளாக்கப்பட்டு அவர்களைப் பயன்படுத்தி லாபம் பெறுவது முதலாளித்துவப் போக்காகிவிட்டது" என்னும் கருத்தைப் பதிவு செய்துள்ளமையை எம்.ஏ.சுசீலா இழப்புகள் எதிர்பார்ப்புகள் என்னும் கதையில் குறைந்த

கூலியாலும், குறைந்த சம்பளத்திற்கு வேலைப்பார்க்கும் டீச்சர் அம்மாவும் புதிய செருப்புக்காக காத்திருந்ததும், டீச்சர் அம்மா வாங்கிய செருப்பு மழையில் ஒன்று அடித்து செல்லப்படுவதும், அடித்து செல்லப்பட்ட செருப்பு கூலி வேலைப்பார்க்கும் பெண்ணுக்குக் கிடைப்பதும் அதைப்பத்திரப்படுத்தி அடுத்த செருப்பும் கிடைக்கும் என எதிர்பார்க்கும் நிலைப்பாடுள்ள பெண்சமுதாயமாகவே காணப்படுகிறது (Mallika, 2006). பொருளாதார ரீதியாக பெண்கள் தன்னிறைவு அடையவில்லை. பெண் மனம் நிறைவு அடையும் வகையில் சமுதாயம் மாறவில்லை என்பதை ஆய்வாளர் கருத்திற்கொண்டு சோசலிச பெண்ணியம் மலரவேண்டும் என்பதைப் பதிவு செய்கிறார்.

## தீவிரவாதப் பெண்ணியம்

தாராளவாதப் மற்றும்சோசலிசவாதப் பெண்ணியங்கள், குடும்பத்திலும், சமூகத்திலும், சமூக நிறுவனங்களிலும் பெண் ஒடுக்கப்படுவதையும், பெண்ணின் உழைப்பு சுரண்டப்படுவதையும் எடுத்துக் கூறி, விடுதலைபெறக் கோரின. ஆனாலும், தந்தை வழிச்சமூகம் கற்றுக்கொடுத்துள்ள பண்பாட்டுக் கட்டமைப்பில் ஆண்-பெண் உயிரியல் கூறுவேறுபாடுதான், குடும்பத்திற்குள் பெண்ணைப் பாலியல் ரீதியில் அடக்கக் காரணமாகிறது என்றுணர்ந்து, தந்தைவழிச் சமூகக் குடும்ப அமைப்பை உடைக்க எழுந்தது தீவிரவாதப் பெண்ணியம். இப்பெண்ணியத்தின் சாரத்தை தேவதத்தா பின்வருமாறு கூறுகிறார்.

“பாலியல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு, பாலியல் ரீதியான உழைப்புப் பங்கீடும் பொருளியல் வர்க்க அமைப்பும் முக்கியப்படுத்தப்பட்ட போது, அது சீர்திருத்தமாக அமைந்துப் போனதால், தீவிரப் பெண்ணியவாதிகள் தந்தை வழிச் சமுதாயத்தை உடைத்தலை முதன்மை நோக்கமாகக் கொண்டனர். இதன்வேர், உயிரியல் ரீதியான குடும்பம் என்பதால் குடும்பத்தையும் முற்றுமாக உடைக்க விரும்பினார்கள்” பெண்ணின் அடிமை வாழ்விற்கு ஆண் தான் காரணம் என்று தீவிரவாதப் பெண்ணியவாதிகள் நினைப்பதால் ஆணின் அதிகாரத்தை வெறுக்கிறார்கள் (Mallika, 2006). பெண்களைவிட ஆண்கள் மேலோங்கிய நிலையில் உள்ளனர் என்ற சமூகப் பண்பாட்டை மறுக்கிறார்கள். எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் பெண், ஆணைச் மையப்படுத்தியோ அல்லது சார்ந்தோ வாழவேண்டிய அவசியமில்லை. தன்னையே தான் சார்ந்தவளாக, தன்னம்பிக்கை உடையவளாக உருவாகவேண்டும் என வற்புறுத்துகிறார்கள். இந்தப் பெண்ணியத்தை ஆதரித்து எழுந்த பெண்ணியவாதிகளின் கருத்தாக்கங்கள், இரண்டாம் பெண்ணிய அலை உருவாகக் காரணமாயின.

தீவிரவாதப் பெண்ணியத்தை உற்று நோக்கும்போது ஆணைவிடப் பெண் உயர்வானவள் என்று வாதிப்பதனை அறியமுடிகிறது. பெண்கள்அனைத்து நிலைகளிலும் தலைமையானவர்களாக திகழ வேண்டும் என்று தீவிரவாதப் பெண்ணியம் வரவேற்கிறது. இங்கே, தீவிரவாதப் பெண்ணியத்தின் போக்கு, தாய்வழிச் சமூகத்தின் போக்கை உட்கொண்டிருப்பதை உணரமுடிகிறது. இயற்கையாகவே ஒரு பெண் எவ்வாறு காணப்படுவாள் என்பதை தீவிரவாதப் பெண்ணியம் காண்கிறது. மறுத்து செயற்கை சுவாசத்தை பெண்களுக்கு கொடுப்பதில்லை. பணிப்பகிர்வு என்பதிலுள்ள மறு உற்பத்தியில் பெண்களுக்கு அதிக பணிப்பகிர்வு உண்டு. அதை மறுப்பதற்கில்லை எனவே அது ஏற்புடையதாக உள்ளது. எனவே உற்பத்தியில் பெண் தகுதிவாய்ந்தவளாகிறாள். மறு உற்பத்தியில் மேலோங்கி சிறப்புப் பெறும் பெண், சமூக உற்பத்திப் பணியில் சிறப்பை இழந்து தாழ்ந்த நிலையை அடைகிறாள்.இதனால் பெண் துணைநிலை அடைகிறாள். எனவே, மறுஉற்பத்திப் பணியில் பெண் கூடுதல் பொறுப்பேற்பதால், பெண் சிறப்பிற்குரியவளாகிறாள் எனத் தீவிரவாதப் பெண்ணியலார் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பெண்ணியலாளர்கள் கூறும் பெண்ணிய வகைகளின் கருத்துக்களை அறிந்துகொள்வதோடு, பெண்ணியக் கருத்தாங்களையும் சேர்த்துப் பார்த்தால், பெண்ணியத்தின் கோட்பாட்டை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். மேலும், தமிழ் இலக்கியத்தின் பெண்ணியத்தின் கருத்தாக்கத்தைப் பேசும்போது பெண்ணியத்தின் அடிப்படைக் கூறுகளை வரையறுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

நெட்டை மரங்கள் கதையில் ஸ்ரீமதிக்கு குழந்தையின்மை காரணமாக சில நேரங்களில் பையித்தியம் பிடித்தவள் போல ஆகி விடுவாள். ஒருநாள் பவுடர் விளம்பரத்தை பார்த்தவள் அதில் ஒரு பெண் அழகான குழந்தைக்கு பவுடர் போட்டுவிடுவதைப் பார்த்து மிகவும் மனநொந்தவளாய் தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீப்பெட்டியை தேடி அலுத்தவளாய் வீதிக்கு வந்து

அங்குள்ளவர்களிடம் தீப்பெட்டியை கேட்டாள். அங்குள்ள பெண்கள் மனிதாபிமானமற்றவர்களாய் யாரும் அவளை தடுக்காமல் தனக்கென என்று சுயநலத்தோடு தங்கள் வீட்டிற்குள் சென்றுவிட்டனர். பிறகு சில நிமிடங்களில் ஸ்ரீமதி எறிந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. மனிதாபிமானம் மனிதர்களுக்கு இல்லை என்பதை இச்சிறுகதை விளக்குகிறது. மனிதாபிமானம் இல்லாமல் பூஜைகள் செய்வது விருதாவான ஒன்றாகும்.கடவுள் அதை ஏற்க மாட்டார் என்பதை இச்சிறுகதை விளக்குகிறது. மனித நேயமற்ற சக மனிதர்களிடம்இரக்கம் காட்டாத பெண்கள் சக்தி வழிபாடு செய்த, தமக்கும் மக்கள் கூட்டத்திற்கும் நன்மை தேடும் முரண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதைக் கொண்டு தீவிரவாதப் பெண்ணியத்தை உணரவைத்துள்ளமை அறியலாம் (Susila, 1994).

## பெண்ணிய கருத்தாக்கங்கள்

பெண்ணியம் என்பது பரந்து விரிந்த தளமாகும் இந்தத் தளத்திற்குப் பெண்ணியவாதிகளால் உருவாக்கப்பட்டுள்ள கருத்தாக்கங்கள், பெண்ணின் தன்னிலையை உடல் வாயிலாகவும், உளவியல் வாயிலாகவும்மற்றும் ஒடுக்கப்பட்ட பெண்ணின் சமூக பொருளாதார நிலையை அறிந்துகொள்ளப் பயன்படும் பெண்ணியக் கருத்தாக்கங்களையும் பெண்ணியலாளர்கள் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர். 1. பண்பாட்டுக் கட்டமைப்பு, 2. தாய்வழிச் சமூகம் 3. தந்தைவழிச் சமூகம், 4. பாலியல் பணி வேறுபாடு, 5. பாலியல் அரசியல், 6. அதிகாரம், 7. விடுதலை.

பெண்ணியக் கருத்தாக்கங்கள் மேலைநாடுகளில் உருவான போதிலும், அவற்றை அந்த நாடுகளின் பண்பாட்டுப் பின்னணிக்குரியதாக மட்டும் சுருக்கிவிடக் கூடாது. காரணம் பெண்ணடிமைத்தனம் என்பது உலகரீதியிலான பொதுத்தன்மை வாய்ந்ததாக இருப்பதால், பெண்ணடிமைத்தனத்தை முழுவதுமாக உணர்ந்துகொள்ளப் பண்பாட்டுப் பொதுப் பின்னணியை அறியவேண்டும்.

### பண்பாட்டுக் கட்டமைப்பு

பண்பாடு பற்றி ஆய்வியலாளர்கள் பல்வேறாக வரையறை செய்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பிரிட்டானிய மானுடவியலாளர் எட்வர்ட் பர்னட் டைலர் என்பவர் பண்பாடு பற்றி “சமூகத்தில் மனிதன் பெறக்கூடிய ஆண், பெண் உறவுகளால் கட்டப்பட்ட பண்பாட்டுப் பாரம்பரிய மனப்பாங்கின் வழி ஏற்பட்ட அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுங்கு, வழக்காறுகள், மற்றும் பிற தகுதிகள், பழக்க வழக்கங்கள் பற்றிய வாழ்க்கை முறைப் பண்பாடு” எனக் கூறியுள்ளதை இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறது (Mallika, 2006).

பண்பாடு பற்றிய இவ்வரையறையை நன்கு தெளிந்து ஆண், பெண் இருவரின் சமூகக் கூட்டு செயல்பாடுகளை அறிந்துக் கொள்ள முனைகிறபோது, அது ஆணிற்கும், பெண்ணிற்கும், வேறு வேறானதாகவும், கற்பிக்கப்பட்டிருக்கிறது என உணரமுடிகின்றது. எப்போதும் பெண் ஆணிற்கு கிழ் தான் என்ற அடிப்படை கருத்தையும் ஆண் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பதைத் தெளிவாக்குகிறது. இந்த வேறுபாட்டைப் பெண்ணியக் கருத்தாக்கக் கோட்பாடுகளால் மேலும் விரிவாக அறிந்துகொள்ள முடிகிறது.

“நமது சமூக வரிசையில், ஆண்கள் பெண்களை ஆளுதல் என்பது பிறப்புரிமையாக இருப்பதைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். ஒத்துக்கொள்ள தயங்குகின்றனர். இந்த ஒழுங்கமைவின் மூலம் ஒரு அறிவார்ந்த உள்முகக் காலனியாக்கம் பெறப்படுகின்றது. இதற்குக் காரணம் நமது சமூகம் எல்லா வரலாற்று நாகரிகச் சமூகங்கள் போலவே தந்தையுரிமைச் (ஆணாதிக்க) சமூகமாக இருப்பதுதான்” என்னும் கேட் மில்லட் கூறியுள்ளக் கருத்தும் இங்குக் கருத்தில் கொள்ளப்படுகிறது (Mallika, 2006).

பண்பாட்டுக் கட்டமைப்பு என்னும் நோக்கிலும் சிறுகதைகளைப்படைத்துள்ளார். தொடுமணற்கேணி என்னும் கதையில் புரொபசர் நாராயணசர்மாவை ஆண் கதாப்பாத்திரமாகப் படைத்து அக்கதாப்பாத்திரம் சுயநலம் கொண்ட போலியான ஆராய்ச்சி கட்டுரையாளராக

அடையாளப்படுத்தியுள்ளார். பெண்ணைப் பாராட்டி, பாராட்டி கட்டுரை எழுதினாலும் தன் வீட்டுப் பெண்களை அடக்கி வைக்க நினைப்பவர். பெண் விடுதலையை குரங்குக்கு ஏணி வைச்சு வேற கொடுக்கணுமாக்கும் என்று சொல்கிற ஜன்மம்" என்று தந்தைவழிச் சமூகத்தையும், அதன் நிலைப்பாட்டையும் கூறியுள்ளமைக் கொண்டு, தந்தைவழிச் சமூகம் நிலைபேறு பெறுவதற்கு முன் தாய்வழிச் சமூகம் சிறப்புப் பெற்றிருந்தது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். எனவே, தாய்வழிச் சமூக நிலைப்பும் வீழ்ச்சியும் பற்றி கதைகளின் வழி விளக்குதல் தேவையாகிறது (Susila, 1994).

## தாய்வழிச் சமூகம்

தாய்வழிச் சமூக அமைப்பு பெண்ணியலாளர்கள் சமுதாயத்தில் பெண்ணுக்கு முதன்மை இடம் கொடுத்திருந்தனர். கடவுள் உருவாக்கிய மனிதகுலத்தில் தலைமுறையாக உள்ள பரிணாம வளர்ச்சியின் உயிர்நாடியாகப் பெண் திகழ்வதோடு, சமுதாயத்தின் அனைத்து முக்கிய பணிகளிளெல்லாம் பெண் முதன்மை இடம் பெற்றிருந்தாள் என அறிந்துக் கொள்ள முடிகின்றது. சிறுகதைகளிலும் பெண் கதாப்பாத்திரங்களின் ஆளுமையைக் காணும் போது அறிந்து கொள்ளலாம்.

1. தாய்வழி சமூகத்தில் பெண்ணின் நிலை.
2. பெண் ஆணைச் சார்ந்து இருப்பதில்லை.
3. தாய்வழி உறவினர் சிறப்புப் பெறுகின்றனர்.
4. சந்ததித் தோற்றம் தாயை முன்வைத்து அறியப்படுகிறது.
5. பெண் வேட்டையாடியபோது குழந்தைகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தாள். தந்தை என்பவர் இல்லை.
6. தாய்த்தெய்வ வழிபாடு மிகத் தொன்மையானது. தமிழ் இலக்கியத்தில் 'கொற்றவை' என்பது தாய்த் தெய்வத்தின் சிறப்பை அறிய உதவுகிறது.

இதை "இந்தத் தாய்த்தெய்வம் மிகப் பழமையான தெய்வம் என்பதால்தான் பழையோள்" என்று பண்டைய இலக்கியங்களில் குறிக்கப்பெற்றாள். மணிமேகலையில் இவள் இருக்குமிடம் "முதியோள் கோட்டம்" என்று குறிக்கப்பட்டது என்னும் கருத்து குறிப்பிடத்தக்கது. பெண் தெய்வத்தை வணங்கும் நிலை இன்றும் இருப்பினும் அது போலியான வணங்குதலாகவே இருக்கிறது. சிறுகதைகளில் தாய் கதாப்பாத்திரங்கள் இரண்டாம் நிலைக்குரியதாகவே காணப்பெறுகின்ற பொது சமுதாயத்தில் தாய்வழிச்சமூகத்திற்கு இடமில்லை என்பதே உணரப்பெறுகின்றது (Susila, 2011).

## தந்தைவழிச் சமூகம்

தந்தைவழிச் சமூக நிலை குறித்துச் சமூகவியல் அறிஞர்கள், பெண்ணியலாளர்கள் "பெண்ணின் துணை நிலைக்கும், தனிச் சொத்துரிமைக்கும் இடையிலான உறவின் மூலம்தான் தந்தைவழிச் சமூகம் நிலைப்படுகிறது" (Mallika, 2006).

தந்தை வழிச் சமூகம் என்பது இரண்டு வகையான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. 1. ஆண்களின் அதிகாரம், 2. தந்தையின் அதிகாரம்.

"பொதுவாகதந்தையின் ஆட்சியைத்தான் பெண்ணியவாதிகள் குறிப்பிடுகிறார்கள். தந்தைவழிச் சமூகமானது ஆண் ஆதிக்கத்தை உள்ளடக்கிக் கொண்டு பெண், இளையோன், குழந்தை, அடிமை, குடும்பப் பணிப்பெண் ஆகியோர் மீது ஆட்சி செய்து, அவர்களை அடக்குகிறது என கூறுகின்றனர்" இதே நிலைதான் இன்றும் தொடர்கிறது. சிறுகதையில் நீண்ட நாள் பிரிந்திருந்த தோழி மீண்டும் சந்திக்கும் சூழலில் மனம் விட்டு பேச முடியாத நிலைக்கு தோழியின் கணவன் அவசர நிலையில் தன் மனைவியை அழைத்து சென்று விடுவதை எண்ணி மற்றொரு தோழி மனதிற்குள் வருந்துவதாக, அதை வெளிப்படுத்தவியலாத சூழலே உள்ளது என்பதும் அறியும் போது ஆணாதிக்கச் சமுதாயமாகவே உள்ளதை நிரூபணம் செய்துள்ளார் (Susila, 1994).

சொல்லில் புரியாத சோகங்கள் சிறுகதையில் ஆணாதிக்க சமுதாயத்தை வெளிப்படுத்துகிறார். உமா பள்ளியில் ஆசிரியர் வேலை பார்க்கிறாள். கடைசி நாளன்று பதில் வணக்கம் சொல்லிவிட்டு வகுப்பறையை விட்டு வெளியே வந்தபோது, மனதில் ஒரு வெறுமை கவிந்து கொண்டது. இரண்டு குழந்தைகளையும் வீட்டிலிருந்து பார்த்துக்கொள்வதற்கு அவளின்கணவர் வேலையை விட்டு நின்று விடு. ராஜினாமா கடிதம் கொடுத்து விட்டு வா என்று கூறிவிட்டார். மாதா மாதம் உமா கொடுக்கக்கூடிய பணத்தை வாங்கிவிட்டு அந்த மகிழ்ச்சியில் வேலையை விட்டு விட்டு வந்துவிட்டார். “இதோ பார் உமா...! உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிக்கிட்டிருக்க நான் உன் ஸ்டூடண்டுமில்லை. இது கிளாஸ்ரூமும் இல்லை! எனக்கு என் பிள்ளைங்களைப் பத்தி மட்டும்தான் அக்கறை..!” கணவனிடமிருந்து வெளிப்பட்ட இரக்கமில்லாத அந்தக் குத்தல் வார்த்தை இதயத்தைப் பிசைய, அவள் விடாமல் அவனைக் கேட்டாள். ஏங்க, அவங்க என் பிள்ளைங்க இல்லையா என்று கேட்டாள்.நாலுபேர் உன்னைப் பாராட்டணும் ! உமா டீச்சரா... அவங்களை மாதிரிப் பிள்ளைங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க யாராலேயும் முடியாதுனு உன்னைச் சுத்தி யாராச்சும் சாமரம் போட்டுக்கிட்டே இருக்கணும். அதுக்கு என்னோட பிள்ளைங்களைப் பலிகடா ஆக்க நான் சம்மதிக்க முடியாது. நேரம் கெட்ட நேரத்திலே நீ வரும்போது அடுத்த வீட்டிலேயும் பக்கத்து வீட்டிலேயும் அனாதைப் பிள்ளைங்க மாதிரி அவங்க ஒண்டிக்கிட்டிருக்கணும்னு என்ன தேவை?” என்று மனதில் தோன்றியபடி வசைப்பாடுகிறான். இங்கு ஆணாதிக்க சமுதாயம் அதிகமாக காணப்படுகிறது. ஒருநாள் உமாவின் கணவர் விபத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். ஒரு வாரமாகத்தான் அவனது உடல்நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் அவனிடம் ஒரு அசைவு தெரிந்தது. உதடுகள் ‘உமா’ என்று முனகியது கேட்டது (Susila, 2011).

“உமா. காலைல நீ டிரெஸ் எடுத்துக்கிட்டு வர்றதுக்காக வீட்டுக்குப் போனப்ப, உங்க எச்.எம். வந்திருந்தாங்க” அந்த ராஜினாமா கடிதத்தை அவங்க இன்னும் ஏத்துக்லையாமே? அன்னிக்கு இருந்த சூழ்நிலைல நான் அப்படிச் சொன்னது உண்மைதான்! இன்னிக்கு நிலைமை வேற மாதிரி மாறிப்போச்சு! ஹாஸ்பிடலுக்குப் பணம் தண்ணியாக் கரையுது என்கிறான். அதற்கு உமா “நான் அந்த ராஜினாமாவைத் திரும்ப வாங்கப் போறதில்லைனு எப்பவோ முடிவு செஞ்சிட்டேங்க!” என்கிறாள். அவன் அதிர்ந்து போனவனாக எரிச்சலோடு கேட்டான் பின்னே. அன்னிக்கு அந்த வேலையை விட வேண்டியிருக்கேனு அப்படி உருகினே!” அது வெறும் வேலை மட்டும்தானா? மனசோட, ஆத்மாவோட தேவை என்கிறாள்” நொடி பொழுதில் அனைத்தும் மாறிவிட்டது (Susila, 2011). ஆண்கள் வேலைக்கு போ என்றாள் போவதும் வேலையை ராஜினாமா செய் என்றாள் செய்வதும் ஆணாதிக்க சமுதாயத்தில் உள்ள நிலையைக் காட்டுகிறது.

பாரட், தந்தைவழிச் சமூகம் என்பது வரலாற்றுப்பூர்வமானது என்றும், பொருளாதாரத் திட்டத்தை வழிநடத்தும் முதலாளித்துவச் சமூகத்தில் ஆண் ஆதிக்கம் வலியுறுத்தப்படுகிறது என்றும் குறிப்பிடுவதைக் கொண்டு ஆராய்ந்தால், நேரடியாக ஆண் கதாப்பாத்திரங்களைக் கொண்டு பொருளாதாரத் திட்டத்தை வழிநடத்தும் சிறுகதைகள் படைக்கவில்லை என்பதால் இக்கருத்துக்கு சான்றுகள் இல்லை.

மார்க்சு, ஏங்கல்சு ஆகியோர் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தில் பெண்ணைப்பற்றி, பெண்ணின் சமூகத் தகுதிநிலையைப் பற்றி விளக்கும்போது, உயிர் உற்பத்தி செய்வதிலும், இச்சமூகத்தில் உற்பத்திச் சக்திகளை, தந்திரமாகவும், சம உரிமை பெற்றும் வாழ்ந்து வந்த பெண்கள் மேற்கூறிய முதலாளித்துவத்தின் போக்கினாலும் தனிச் சொத்துரிமையாலும், துணைநிலையினராகவும், சார்பு மாந்தராகவும் மாறிப் போயினர். இம்மாற்றம் வரலாற்று நிகழ்ச்சியில் தவிர்க்கவியலாத மாற்றமாகியது என விளக்குகின்றனர். இவ்விளக்கம் கதைகளில் வெளிப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது (Susila, 1994).

ஐன்ஸ்டீன் என்பவர், பெண்ணின் பாலியல், மறுஉற்பத்தி, ஆகியவற்றை ஆண் கட்டுப்படுத்துபவனாக விளங்குவதைத் தந்தைவழிச் சமூகக் கருத்தாக்கமாகக் கொள்கிறார். மேலும், முதலாளித்துவச் சமூகத்தில், ஆண்கள் பெண்களின் உழைப்பைச் சுரண்டுபவர்களாக இருக்கிறார்கள் எனவும் கருதுகிறார். இக்கருத்து சிறுகதையான “பொம்பள வண்டி” கதையின் வழி ஒப்பிட்டு உணரலாம் (Susila, 1994).

இவ்வாறாக ஆண் ஆதிக்கக் கருத்தை குடும்பமாகிய நிறுவனத்தில் செயல்படுத்திவரும் தந்தைவழிச் சமூகமானது, ஆண்-பெண் பாலின வேறுபாட்டில் உளரீதியில், பெண்ணின் நனவிலியை சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப உருவாக்கியிருக்கிறது. இதற்கு "ஆண், தன்னிலிருந்து வேறுபட்டவள்தான் பெண் எனக் கருதுகிறான்" எனவும், மேலும் அவரே, பெண்ணைப் பற்றிக் கூறும்போது பெண் 'அவளாகப் பார்க்கப்படுவதில்லை. ஆணின் பிம்பமாக மட்டுமே பார்க்கப்படுகிறாள். அவள் தனித்துவள் வாய்ந்தவளல்ல… அவன் தன்னிலை வாய்ந்தவன். அவன்தான் சுதந்திரமானவன். அவள் தன்னிலைக்கான பொருளாக விளங்குகிறாள்" என்று சிமொன் தி பியுவாயிர் கூறியுள்ளதைக் கொண்டு சிறுகதைகளை ஆராய்ந்தோமானால், பல கதைகளின் பெண் கதாப்பாத்திரங்கள் தனித்துவம் வாய்ந்தவளாக ஆண் சமூகம் ஏற்றுக்கொள்ளாததைச்சுட்டிக்காட்டி, தனித்துவம் வாய்ந்த ஆளுமைப்படைத்தவள் என்பதை அறிந்து கொள்ளலாம்" (Mallika, 2006).

## எம்.ஏ. சுசீலாவின் சிறுகதைகளில் ஆண் பெண் இடையிலான பாலியல் பணிவேறுபாடுகள்

ஆணாதிக்கம் நிறைந்த சமுதாயம் பொருளை ஈட்ட வெளியே சென்றாலும் பெண்கள் வீட்டிலிருப்பதையும், வீட்டு வேலைகளில் ஈடுபடுவதையுமே நியதியாக்கி கொண்டுள்ளது. எனவே, பெண்களின் உழைப்பு என்பது ஆணாதிக்கத்தை சார்ந்ததாக உள்ளது. நான் பேச நினைப்பதெல்லாம் கதையில் மிகுந்த அன்யோன்யமாகக் காதலித்து பல விஷயங்களைப் பேசித் திரிந்து திருமணம் செய்து கொண்ட பின் அதுவும் இரண்டு குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆனபின். இயந்திர வாழ்வில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் அரை நிமிடம் கூட மனம் விட்டுப் பேச இயலாத இறுக்கமான சூழல். உடன் பணியாற்றும் அலுவலர் தன் கணவர் வெளியிட்ட செய்தி பத்திரிக்கையில் வந்திருப்பதைக் குறித்து பெரிதாகப் பாராட்டியதால். அதைப் படித்த அவள் உடனே தன் கணவனைப் பாராட்ட எத்தனித்து, தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, மறுமுனையில் ஒலித்த தன் கணவரின் வெறுப்பான பேச்சுக்கு ஆளாகி மனம் குமுறுகிறாள்.

மாலை வீடு திரும்பியவுடன் தன் செயலுக்காக வருத்தம் தெரிவித்த கணவனின் இறுக்கமான சூழலைப் புரிந்து கொள்கிறாள். இருவரும் அரைமணி நேரமாவது மனம் விட்டுப் பேச முடிவெடுக்கின்றனர். ஆனால், அது மறுநாள் நடக்குமா?என்ற கனத்த இதயத்தோடு அன்றைய பொழுது கலைகின்றது.இருப்பினும், இருவர் நினைவுமே ஒன்றாக இருக்கின்றன.இச்சிறுகதையில் ஆண் பெண் பணிவேறுபாடு பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.இரண்டு பேருமே வேலைக்கு செல்கின்றனர்.ஆணை விட பெண்ணிற்கு பணி சுமை அதிகம்.ஆனாலும் பெண்ணிற்கு ஆற்ற வேண்டிய கடமை என்று ஒன்று உள்ளது.அதை சில ஆண்கள் கடைப்பிடிப்பதில்லை.எத்தகைய பணிச்சுமை இருந்தாலும் சிறிது நேரமாவது மனம் விட்டு பேசினால், இல்லம் சுமூகமாய் இருக்கும் என்பதைப் புலப்படுத்தும் கதை இது.கணவன்-மனைவி உறவு நிலையில் மனம் விட்டு பேசுதல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.கணவன்-மனைவி புரிந்து வாழ்தலில் ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.மனத்தில் தோன்றும் எண்ணங்களை மனம் விட்டு பேசும் போது எண்ணற்றச் சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலும்.எனவே பாலியல் பணிவேறுபாடுஎன்பது பெண்களை அதிகமாக உளவியல் ரீதியாக பாதிப்படையச் செய்கிறது.

"ஆன் ஓக்கலே என்பார், குடும்பத்தில் பெண் வீட்டுப்பணி செய்தல் என்பது இயற்கையானது உலகளாவியது. தேவையானது என்று கூறுகிறார். அதை விளக்க அவர் மூன்று கருத்துக்களை முன்வைக்கிறார்.

1. உயிரியல் அடிப்படையில் ஆண் வேட்டையாடச் செல்லுதல், பெண் வீட்டில் பணிபுரிதல். 2. மானுடவியலடிப்படையில், ஆண் மிகவும் பலம் வாய்ந்தவன். கருத்தரிக்கும், குழந்தையைப் பாதுகாக்கும் போதும் பெண் பலம் குறைந்தவளாக இருக்கிறாள். பெண் வீட்டில் பணி செய்வதற்கும், ஆண் வெளியில் வேலை செய்வதற்கும் பாலினத் தொன்மம் காரணம் எனக் கூறுகிறார். 3. சமூகவியலடிப்படையில் பணிவேறுபாடு பாலினம் சார்ந்தது. குடும்பத்திற்குத் தேவையானது".

பெண்ணினத்திற்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் மீது நான் கொண்ட தார்மீகக் கோபம், பல சிறுகதைகளுக்கு வித்தாகி, என்னை ஆவேசமாகவும்… சில வேளைகளில் ஆக்ரோஷமாகவும் கூட எழுத இயக்கிய உந்துசக்தியாகி அமைந்தது" என்னும் கருத்தை வெளிப்படுத்தி எதையும் சாதிக்கவல்லவள் என்பதை சிறுகதைகளில் எம்.ஏ. சுசீலா உணர்த்த தவறவில்லை எனலாம்.

ஆண் பெண் பணி வேறுபாடுகள் பற்றி அவர்களின் ஸ்வயங்கள் கதைப்படி பார்த்தால் இருவர் கல்லூரியில் படிக்கும் போதே காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இருவருமே கவிதை எழுதுவதில் சிறந்தவர்கள். தங்களுடைய கவிதைகளை மாறி மாறி படித்து பாராட்டிக் கொள்வர் (Susila, 1994). திருமணத்திற்கு பிறகு அன்று வெளியான மாத இதழில் அவளுடைய படைப்பு வந்திருக்கிறது. அவள் கணவன் அந்தக் கவிதையை படிக்கவில்லை. இதில் அவள் மனம் நொடிந்து போகிறாள். காதலிக்கும் போது இருந்த அந்த நெருக்கம் இப்பொழுது இல்லை என்று வருந்துகிறாள். அவள் அவனிடம் தான் எழுதிய ஒரு கவிதையை அஞ்சலக பெட்டியில் போட்டுவிடுமாறு கொடுத்த கவிதை குவியலாய் கிடக்கும் அலமாரியில் இருப்பதை பார்த்து தன்னுள்ளே அடைப்பட்டுப் போகிறாள். இதில் திருமணத்திற்கு பின்பு வாழ்க்கையை தேட வேண்டியிருக்கிறது.இன்றைக்குள்ள அவசர காலக்கட்டத்தில் அவசர கதியாகவே அனைவரும் ஓடுகின்றனர்.ஏனென்றால்ஆண் பெண் தங்கள் பணியை பகிர்ந்து கொள்கின்றனர்.அதே நேரத்தில் குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து விடுகிறது.இதில் ஆண்களுக்கு குடும்ப பொறுப்பு மிக குறைவாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வீட்டிற்கு வருவதில் தாமதம்.நண்பர்களுடன் சுற்றுவது போன்றவை அதிகமாக காணப்படுகிறது.ஆனால் பெண்களுக்கு வீட்டிலும், வேலைப் பார்க்கும் இடங்களிலும் பணிச்சுமை அதிகமாக உள்ளது.இதனால் உளவியல் ரீதியாக பெண் பாதிப்படைகிறாள். இச்சிறுகதையில் திருமணத்திற்கு முன்பு ஆண்கள் எப்படி இருக்கின்றனர் என்பதையும், ஆண் பெண் பணிவேறுபாடுகாரணமாக திருமணத்திற்கு பின்பு அவர்களுடைய உண்மையான உருவம் என்ன என்பதையும் உளவியல் ரீதியாக பெண் பாதிப்படைவது பற்றியும் ஸ்வயங்கள் கதை வெளிப்படுத்துகிறது.

## பாலினம் பற்றி எம். ஏ சுசீலாவின் சிறுகதையால் அறியப்படும் கருத்துக்கள்

பாலினம் என்பது உயிரியல் அடிப்படையானது. ஆண்பால், பெண்பால் என்ற இருவகை அமைப்பைக் குறிக்கின்றது. இவ்வகையில் பெண் ஆணுக்குத் துணைவியாகிறாள். ஆணும், பெண்ணும் விரும்புவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. பெண் தாய்மை அடைவது புனிதமாகக் கருதப்படுகிறது. பெண் மறுஉற்பத்திக் களமாக எண்ணப்படுகிறாள். பெண் ஆணைச் சார்ந்தே வாழ்கிறாள். இவை அனைத்தும் ஆண், பெண், பாலின வேறுபாடாக, ஆணாதிக்க சமுதாயம் கருதுகிறது. அவ்வாறு கருதினாலும் இன்றைய சூழலில் தனித்துவ, தனிமாந்தர் உரிமைப்பெற்றவளாக மதிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தாக்க வெளிப்பாடாகவே தன் சிறுகதைகளைப் படைத்துள்ளார் (Susila, 2011). தாயும் தன் குழந்தையை தள்ளிடப்போமே என்ற சிறுகதையில் பால்குடி மாறாத பிள்ளை வீதியில் தனியாக அங்கேயும், இங்கேயுமாக அல்லாடிக் கொண்டிருக்க அக்கம் பக்கம் தெருவினர் மக்கள் ஒன்று கூடி விட்டனர்.

"வாங்கம்மா! இந்த அக்கிரமத்தைப் பாருங்கம்மா! பச்சைப் புள்ளையை, பால்குடி மாறாத புள்ளையை வீதியிலே எவளோ சீரழிய விட்டிருக்காளே! என்று பொன்னம்மா கத்த பானு வருகிறாள். பானு பொன்னம்மாவிடம் அந்த பிள்ளையைத் தூக்கிட்டு உள்ளே வா என்கிறாள். பானு குழந்தையை சுத்தப்படுத்தி அதற்கு தேவையான உடை உடுத்தி வைத்திருந்தாள். அந்த நேரத்தில் கூலி வேலை செய்யும் பெண் அங்கே நின்றிருந்தாள். அவளுக்கு இருபத்தைந்து வயதுதான் ஆகியிருக்கிறது. அதற்குள் அவள் வாழ்க்கை உலர்ந்து போயிற்று. கந்தலான புடவை உடுத்தியும், எண்ணெய் இல்லாத அவள் தலையும் அவள் வறுமையை எடுத்துக் காட்டின. சித்தாளு வேலைக்கு சென்றிருந்த சமயத்தில் தன் எட்டு வயது மனநலம் பாதிக்கப்பட்ட மூத்த பிள்ளையிடம் குழந்தையை விட்டு போயிருக்கிறாள். அவன் எங்கோ போய்விட இந்த குழந்தை தனியாக கிளம்பி வந்துவிட்டது என்று பானுவிடம் கூறுகிறாள்.உன் கணவன் எங்கே என்று பானு கேட்க "அது விட்டுட்டுப் போயி ஆறு மாசமாச்சும்மா!என்று மிகுந்த கவலையோடு கூறுகிறாள்.இச்சிறுகதையில் பெண் ஆணைச் சார்ந்து

வாழ்கிறாள் என்று கூற முடியவில்லை.அவன் விட்டு விட்டு சென்றுவிட்டான்.இதில் உற்பத்தி பணியும் பெண்ணுடையது வளர்ப்பு பணியும் பெண்ணுடையதாகிறது.பெண் தாயாக இருப்பதால் அந்த உறவின் மேன்மை சமூகத்திலும் மாற்றத்தைக் கொண்டு வரும்.குடும்பத்தில் இந்த கூலிப் பெண்ணுக்கு கணவனின் ஆதரவு இல்லை.அவள் வாழ்க்கை முழுவதும் மனதளவில் பாதிக்கப்படுவாள் என்பது உளவியல் வகையிலான உண்மையும் கூட.

## எம்.ஏ. சுசீலாவின் சிறுகதைகளில் பாலியம் பற்றிய கருத்துகளின் சுருக்கம்

பாலியல் வேறுபாட்டில் ஆண், பெண் ஏற்கும் பணியை இயற்கையில் வேறுபாடுடையதாகவும், அதன் மதிப்பு வேறுபாடுடையதாகவும் கற்பிக்கப்படுகிறது. குடும்பத்தில் பெண் ஏற்கும் 'இயற்கையானபணிவேறுபாடு| குழந்தைப் பெறுவதையும், வளர்ப்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இதற்கு ஆண், பெண் மற்றும் குழந்தைகள் மீதும் செலுத்தும் அதிகாரம் தான் காரணம். அதனால் பெண்ணின் உழைப்பையும், உற்பத்தியையும் ஆண் தன் ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்து, பெண்ணைத் துணைநிலையில் நிறுத்துகிறான்.

“பெண் இயற்கையுடன் தொடர்புடையவள். இயற்கையும், பெண்ணின் உடலும் உற்பத்திப் பணியைச் செய்கின்றன. ஆனால், இவை இரண்டும் ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதில்லை. பெண்ணின் உடல் பெண்ணிற்குச் சொந்தமாக்கப்படுவதில்லை. பூமிக்கும் சொந்தமில்லை. இவை, தன்னை வளர்த்துக் கொள்ளவும், பிறரை வளர்க்கவும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, பெண்ணின் உடலும், இயற்கையும் சமூகத்தையும், வரலாற்றையும் உற்பத்தி செய்கின்றன.” பாலினங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டிற்கு அடிப்படைக் காரணமாக அமைவது, ஆண், பெண் பாலின வேறுபாட்டின் மூலம் வன்முறையைப் பிறப்பித்து பெண் உழைப்பைச் சுரண்டி, ஆளுகையைச் சமூக உறவாக்கி கொள்வதன் மூலம்தான் என்னும் கருத்தை ஜெர்மன் பெண்ணியவாதியான மரியா மைஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கால கட்டத்தில் காலந்தோறும் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாக இருந்தது ஒத்துக் கொள்ள வேண்டிய உண்மை. வேலை சுமை, கல்விசுமை, விதவை நிலை போன்றவை காணப்பட்டன. இன்றைக்கு மீட்சி இருக்கின்றது. புலம்பலும் இருக்கின்றது. ஆணாதிக்கம் என்று சொல்வது தவறு. கல்வி வேலைவாய்ப்புகள் இருக்கும்போது வெத்து புலம்பலால் பயன் இல்லை. ஆக்கப்பூர்வமாக யோசிக்க வேண்டும். அதற்கு இன்றைக்குள்ளசூழல் பொருத்தமாக இருக்கிறது. ஆண்களை ஒதுக்கி விட்டு நாம் இருக்க முடியாது. எனவே சமத்துவ பெண்ணியம் தான் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.எனவே ஒருத்தரை ஒருத்தர் புரிந்து வாழ வேண்டும்.ஆண்களை எதிரிகளாக கருதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை.ஆண்கள் பெண்களை அடிமைகளாக கருதி நசுக்க வேண்டிய அவசியமும் இல்லை.அப்படிப்பட்டதான ஒரு நிலையை நாம் தான் ஏற்படுத்தியாக வேண்டும்.இதற்கு எது தேவை என்று சொன்னால் பெண்ணின் சிந்தனையை கூர்மைப்படுத்த வேண்டும்.இன்றைக்கு எழுதக்கூடிய உடல் சார்ந்த, பால் சார்ந்த கவிதைகளில் எனக்கு உடன்பாடு இல்லை.இவ்வளவு நாளும் ஆண்கள் போட்டு வைத்த பாதையில் சென்றோம்.மொழி, எழுத்து அனைத்துமே ஆண்களிடம் தான் இருந்தது.ஆண்கள் எதை சட்டம் என்றுச் சொல்லுகிறார்களோ அதைத்தான் பெண்கள் கடைப்பிடித்தார்கள். பெண்களுக்கான எழுத்தை பெண் தான் முடிவுச் செய்ய வேண்டும் என்னும் கருத்து இன்றைய தேவையாகின்றது.

## எம்.ஏ. சுசீலாவின் சிறுகதைகளில் பாலியல் அரசியல் காட்டப்படும் விதம்

கேட்மில்லட் என்ற தீவிரப் பெண்ணியவாதி, “பாலியல் அரசியல்” என்பது ஆண்-பெண் உறவுகளின் அதிகாரக் கட்டமைப்பு என்பதாகும் எனக் கருத்துத் தெரிவிக்கிறார். பாலியல் உறவும், அதன் உள்ளீடான அதிகாரமும் குடும்ப அமைப்பில் காலூன்றுகின்றன. இதனால் குடும்பம் ஆணுக்கு முதல் இடத்தையும், பெண்ணிற்கு இரண்டாம் இடத்தையும் தந்திருக்கிறது.

மனோநிலை, கதாப்பாத்திரம் இச்சமூகத் தகுதிநிலை ஆகிய மூன்றின்வழி பாலியல் அரசியல் செயலாக்கப்படுகிறது எனக் கேட் மில்லட் கூறுகிறார். இவர் கருத்துப்படி, “அறிவு, போர்க்குணம், சக்தி,

திறமை என்னும் குணங்கள் உடையவர்களாக ஆண்களும், அடக்கம். அறியாமை, கற்பு பயன்பெறத் தக்கவை, செய்ய இயலாமை என்னும் குணங்கள் உடையவர்களாக பெண்களும் உருவாக்கப்படுகின்றார்கள்."

ஆண் ஆளுகையின் முதன்மை நிறுவனம் குடும்பமாக இருப்பதால், ஆண் குடும்ப உறுப்பினர்களை (மனைவி, குழந்தைகள், இளையவர்கள்) ஆள்வதோடு, முழுச் சொத்துரிமையையும் பெறுகின்றான். மேலும், பாலியல் அரசியலால் அமுக்கப்பட்ட பெண்கள், ஆண்களின் வாழ்வில் தங்களை இனம் காண்பவராய் இருக்கிறார்கள்.

எச். ஆர். ஹேய்ஸ் என்பார், "பெண்ணின் உடல் ரீதியிலான வேறுபாடுகளால் பெண் தாழ்ந்தவளாக இருக்கிறாள்" என்று கூறியுள்ளதை எம்.ஏ. சுசீலாவின் கதைகளின் வழி அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும், எச். ஆர். ஹேய்ஸ் தொன்ம, மற்றும் நாகரிக உலகுகளில் பெண்கள் பற்றிய பண்பாட்டுக் கருத்தாக்கங்கள் ஆணினால் வடிவமைக்கப்பட்டவை என்றும், பெண் பற்றிய பிம்பம் என்பது ஆண்களால் உருவாக்கப்பட்டது என்றும் கூறுகிறார்.

எனவே ஆணாதிக்கச் சமூகத்தில், பெண்ணின் மனோநிலை, பாத்திரம் சமூகத் தகுதிநிலை யாவும் திருமண, குடும்ப உறவுகளால் வடிவமைக்கப்பட்டு, அவற்றுள் பெண்ணின் பாலியல் கட்டுப்படுத்தப்படுவது அரசியலாகி வருகிறது. இங்கே குறிப்பிடப்படும் அரசியல் என்பது ஆண் அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது.

சுருக்கமாக, பெண்ணின் உடல், ஆணின் உடைமையாக்கப்பட்டு, பெண் தன்னிலையற்றவளாக வாழ்கிறாள் என்பது பாலியல் அரசியல் கருத்தாக்கத்தின் கீழ் விவரிக்கப்படுகிறது எனக் கூறலாம். பாலியல் அரசியலில் செயலாகி வரும் அதிகாரம். பெண்ணின் பாலின, பாலியப்பாகுபாட்டின் உள்ளீடாகக் கருத இடமளிப்பதால் 'அதிகாரம்| பற்றியும் அறிய வேண்டியதாகிறது. பாலியல் அரசியல்தான் ஆணுக்கு அதிகாரத்தை ஏற்படுத்துகிறது. எனவே சமத்துவ பெண்ணியம் பின்பற்றப்பட வேண்டும் என்பது இன்றைய நிலையாகும்.

மகேசுகளும், மகேஸ்வரிகளும் என்ற சிறுகதை பாலியல் அரசியலை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கணநேரச் சுகத்திற்காய்க் கணக்கற்ற குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் தாம் பெற்றெடுத்த குழந்தைகளுக்குத் தாமே அநீதி இழைப்பதும் இன்றைய அறிவியல் வளர்ச்சியிலும் ஏழைகளிடம் தொடரவே செய்கின்றன. அதிலும் பெண்களுக்கே அதிக பாதிப்பு. மகேசுவின் படிப்பு கனவை சரசு அழிப்பதும் மகேசு தன் கனவைத் துறப்பதும் தவிர அவர்களால் என்ன செய்ய முடிந்தது. இன்னும் எத்தனை சரசுகளால் எத்தனை மகேசுகள் உருவாக இருக்கிறார்களோ பாலியல் அரசியல் நன்றாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு கதையில் சாந்தி மாலை ஆறு மணிக்கு கல்லூரியை விட்டு வேகமாக கிளம்புகிறாள்.அவள் வீட்டிற்கு அருகில் உள்ள தெருக்கள் எல்லாம் இருள்சூழ்ந்து காணப்படும்.அந்த பயத்துடனயே வேகமாக கிளம்புகிறாள்.காலையில, சாந்தி கல்லூரிக்குச் செல்லும்போதே அவள் அம்மா சாந்தியிடம் அப்பாவும் ஊரில் இல்லை என்னால் பேருந்து நிறுத்தத்திற்கு வர முடியாது.ஆகவே சீக்கிரமாய் வீடு வந்து சேரு என்று கூறுயிருக்கிறாள்.இதை மனதில் வைத்துக் கொண்டே சாந்தி வீட்டைக் நோக்கி நடக்கிறாள்.நெடுஞ்சாலையிலிருந்து இறங்கி நான்கு திருப்பங்களைக் கடந்தபின் ஐந்தாவது திருப்பத்தில் தான் அவள் வீடு.சரியான தெரு விளக்குகளும் கிடையாது.இடிந்த நிலையிலிருக்கும் கட்டடங்கள், காலி வீட்டு மனைகள் அமைதியான தெரு இவையெல்லாம் சாந்தியை பயத்தில் ஆழ்த்தின. முதல் தடவையாக நேரம் கடந்து செல்கிறாள் சாந்தி.

மூன்றாவது திருப்பத்தில் இவள் நடந்துக் போகும் போது தலைவிரி கோலமாய் ஒரு பெண் ஓடி வருவதும், அவளைத் துரத்திக் கொண்டு முரடான ஆண் ஒருவன் தொடர்வதை இவள் பார்க்கிறாள். இவளுடைய மனதில் பயம் தொற்றிக்கொண்டு விட்டது. விரைந்து ஓடி விடலாம் என்று மனத்தில் நினைக்கிறாள். ஆனால் பயத்தில் தயங்கி நின்றுவிட்டாள். அந்த நேரத்தில் முரட்டுதனமான அந்த ஆண் அந்தப் பெண்ணை ஒரே பிடியில் எட்டிப்பிடித்து விட்டான். அந்த இருளடைந்த கட்டிடத்தை நோக்கி அந்தப் பெண்ணை இழுக்கிறான். "ஐயா. என்னை விட்டிடுய்யா...! நான் இன்னொருத்தன்

பொஞ்சாதிங்கிறதை ரோசனை பண்ணிப்பாருய்யா… என் வாழ்க்கையைப் பாழடிச்சிடாதேய்யா!”14 என்று கதறுகிறாள். இவள் சாந்தி வீட்டில் வேலைப்பார்க்கும் ஆயாக் கிழவியின் மகள். குடிகாரக் கணவனிடம் சீரழிந்துக் கொண்டிருக்கும் அவள் வாழ்க்கையில் இங்கேயும் ஒரு அசுரனா என்று சாந்தி மனதில் நினைத்துக் கொண்டு உரக்கக்குரல் கொடுக்கிறாள்.

இத்தருணத்தில் சாந்தியைப் சற்றும் எதிர்பார்க்காத அந்த ஆண் திடுக்கிட்டபடி, கைப்பிடியை நெகிழவிட சாந்தியின் அருகில் அஞ்சலை ஓடி வருகிறாள். ஆனால் அவன் “என்னாடி… பெரீசாப் பத்தினி வேஷம் கட்டடறே?! உன்னைக் கட்டிட வேலைக்கு ஏத்துக்கிட்டதே. இதுக்குத் தானேடி!” அவள் தலைமுடியைப் பிடித்துப் பற்றியிழுக்கிறான். அஞ்சலையோ நீங்க ஓடிப்போயிடுங்க சின்னம்மா…! இங்கே நிக்காதிங்க. இன்னிக்கு இந்த மிருகம் என்னை இரையாக்காம விடப்போறதில்லை. நீங்களாவது தப்பிச்சுப் போங்க. ஓடுங்க” அவன் பிடியில் சிக்கித் தமிறும் அந்த நிலையிலும் கதறுகிறாள் அஞ்சலை” ஆனால் அவனோ சாந்தியைப் பார்த்து “உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போவியா. இதிலே தலையிட்டே. உன்னையும பொலி போட்டுறுவேன் ஆமாம்”15 என்கிறான்.

சாந்தி அவனிடம் அவளை விட்டு விடு என்று கெஞ்சுகிறாள். ஒரு முடிவுக்கு வந்தவளாய் தன்னுடைய பலத்தை பயன்படுத்தி கீழே கிடந்த பித்தளைப் பாத்திரத்தை எடுத்து அந்த ஆண் மீது வீசி எறிகிறாள். விசையோடு சென்ற அந்தப் பாத்திரம் அவன் நெற்றியை தாக்கிவிட்டது. நெற்றியிலிருந்து குருதி பெருக அஞ்சலையை விட்டு விட்டான். பின் இருவரும் வீட்டிற்கு நடக்கிறார்கள். இக்கதையில் சாந்தி தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றிப் பெற்று விட்டாள். சிறுவயதிலேயே தன் நண்பர்கள் தற்காப்பிற்காக படித்த கராத்தேவை நான் படிக்கவில்லையே என்று வருத்தப்படுகிறாள். இருப்பினும் அந்த நேரத்தில் கையில் கிடைத்த ஆயுதத்தை பயன்படுத்தி மேற்கொண்டுவிட்டாள்.இக்கதையில் பெண்கள் தற்காப்புக் கலையை கற்க வேண்டும் என்ற விழிப்புணர்வை அனைத்து பெண்களுக்கும் ஆசிரியர் கூறியுள்ளார்.பெற்றோர் பெண்களை வீரத்துடன் வளர்க்கும் கடமைக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.ஆணாதிக்க சமூகத்தில் ஆண்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி பெண்களை ஒடுக்குதல, பாலியல் தொல்லைக் கொடுத்தல் போன்றவற்றை அரங்கேற்றுகிறார்கள்.வேலைக்குச் செல்லும் இடங்களிலும் பாலியல் தொல்லைகள்.வெறிப்பிடித்த ஆண்கள் சமுதாயத்தில் பெண்களால் நிம்மதியாக வாழ முடியாது.“பால் என்பது ஆண், பெண் உடல் உறுப்புகளால் வேறுப்படுத்தப்படுகிறது” பெண்களுக்குரிய கடினங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். பெண்கள் உடலளவில் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்றெல்லாம் நினைத்து அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் என்று தெரிந்து ஆண்கள் இதை ஓர் அறிவுரையாக எடுத்துக்கொள்ளலாம்.

## முடிவுரை

குடும்ப அமைப்புகளில் என்றுமே மறைமுகமாகவும், வெளிப்படையாகவும், பெண்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த பாதிப்புகளிலிருந்து பெண் மீண்டு வர வேண்டும். பெண்ணின் உரிமையைப் பற்றி சிறிதேனும் சமுதாயம் சிந்திக்க வேண்டும். ஆண்கள் சமுதாயத்தில் ஆண்களின் ஆதிக்கப் போக்கு, சிறுமைக் குணம் அதிகளவில் காணப்படுகிறது. பெண்ணுரிமை மறுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் பொறுமையோடு அணுகி கணவன் மேல் உள்ள கோபத்தை மற்ற ஆண்களிடம் தைரியமாய் எதிர் கொள்கிற நிலை பெண்ணுக்கு உருவாக வேண்டும். பெண்ணுரிமையை அவள் விட்டுக்கொடுக்கவில்லை. பொம்பளை வண்டி சிறுகதையின் நோக்கம் பெண்ணின் அடிப்படை உரிமைகள் மீட்கப்பட வேண்டும் என்பதே. பெண்ணிற்கு எல்லா நிலையிலும் சமத்துவம் அளிக்கப்பட வேண்டும் மற்றும் பெண்ணின் தனித்திறமைகள் மதிக்கப்பட வேண்டும். ஆண்கள் வீட்டிலேயே இருந்துக் கொண்டு பெண்கள் சம்பாதித்து வருவதை வாங்கி செலவழித்து கொண்டு அவர்களையே ஆள வேண்டும் என்ற நிலை மிக விரைவில் மாறி ஆணுக்கு பெண் நிகர் என்ற கூற்று விரைவில் மெய்ப்பட வேண்டும். இக்கருத்தையே ஆசிரியர் எம்.ஏ. சுசிலா அவர்கள் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். வெற்றுப் புலம்பல்களின் காலத்தைக் கடந்து வந்து விட்டோம் என்பதைப் புரிந்து கொண்டு தங்கள் மீட்சிக்காகப் பிறரைச் சார்ந்திராமல் அதற்கான வழிமுறைகளைத்

தாங்களே கண்டறியும் எழுச்சி இன்றைய பெண்ணுக்கு ஏற்பட்டாக வேண்டும் என்பதை மனதிற்கொண்டால் சமத்துவ பெண்ணியம் நிலைத்து சமூகம் தழைக்கும். ஆண்களுக்கு பெண்கள் மீது மரியாதையும், மனிதநேயமும் ஏற்படுவது மிகவும் அவசியமாகும். இவருடைய சிறுகதைகளில் புதிய, புதிய சிந்தனைகளைப் படைத்து பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஊட்டியுள்ளார். பெண்களுக்கான எழுத்தை பெண் தான் முடிவுச் செய்ய வேண்டும் என்னும் கருத்து இன்றையத் தேவையாகின்றது. ஒரு சிறுகதை வெற்று சம்பவமாகவோ, சுவாரசியமான நிகழ்வாகவோ மட்டும் அமைந்து விடாமல் தனி மனித அல்லது சமூக மனசாட்சியைக் கொஞ்சமாவது அசைத்துப் பார்ப்பதாக அமைய வேண்டும் என்பதை எம்.ஏ. சுசீலாவின் சிறுகதைகள் நிரூபணம் செய்கின்றன. பெண்ணிய உளவியலின் உள்கூறுகளைத் தன் கதாப்பாத்திரங்களின் வழியே வெளிப்படுத்தி எண்ணம், சிந்தனை, மொழியாற்றல், செயலாற்றல் ஆகியவை வாசகர்களிடையே உருவாக்கி சமத்துவ பெண்ணியம் நிலைப்பெற செய்ய முடியும் என்னும் உறுதிப்பாட்டை இவருடைய படைப்புகள் ஏற்படுத்தியுள்ளன.

## References


Mallika, Aranga. (2006) Tamil Ilakkiyamum Penniyamum, New Century Book House, Chennai, India.

Parimalam, (2011) T. Janakiraman Novelkalil Pengal, Mother Teresa Women's University, Kodaikanal, India.

Subramaniyan, V. (1982) Bharathidasan Kavithaikal, Manivasagar Pathippagam, Chennai, India.

Susila, M.A. (1994) Puduthiya Piravesangal Magishavatham, Thalil Pathippagam, Chennai, India.

Susila, M.A. (2011) Devanthi Sollil Puriyatha Sogankal, Vasal Pathippagam, Chennai, India.

Vethaththa, (2006) Penniyam-Oru Varalatrup Paarvai, Penniyam Sirappuethal, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License